**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

## CC.NO. 43/2020 DW-1

| | |
|---|---|
| Name | உஷா |
| Husband/Father Name | பழனி |
| Village /Area | புளியங்கண்ணு |
| Taluk | |
| Occupation | இல்லத்தரசி |
| Age | 61 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 05.08.2025 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

### முதல் விசாரணை

நான் புளியகண்ணுவில் வசித்து இல்லதரசியாக உள்ளேன். இவ்வழக்கில் நான் 2ஆம் எதிரி ஆவேன். இந்த வழக்கை எனது மருமகள் புவனேஸ்வரி தாக்கல் செய்துள்ளார். எனக்கு 3 பிள்ளைகள் 2மகன், 1 மகள் ஆவார். மகள் பெயர் சாந்தி மூத்த மகன் பெயர் ஸ்ரீகாந்த், இளைய மகன் பெயர் ஜெய்கணேஷ், இந்த புகார் ஜெயகணேஷ் மனைவி புவனேஷ்வரி அளித்தாகும். அவர்கள் இருவருக்கு 2017 ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. திருமணம் ஆகி 1 வாரம் எங்கள் வீட்டில் இருந்தார்கள். இரண்டாவது வாரத்திலிருந்து ஆற்காட்டில் தனிக்குடித்தனம் வைத்தோம். நான் எப்போதாவது சென்று அவர்களை பார்த்து வந்தேன். இரண்டு மாதம் கழித்து அவர்களை பார்க்க சென்ற போது மகன் மட்டும்தான் வீட்டில் இருந்தான். எங்கே என்று கேட்டபோது தனது தயார்வீட்டிற்கு போனதாக சொன்றார். பின்பு 2 வருடம் கழித்து காவல் நிலையத்தில் புவனேஸ்வரி எங்கள் மீது புகார் அளித்தார். போலிசார் எங்களை அழைத்து விசாரணை செய்தார்கள். அப்போது

புவனேஸ்வரி எங்களை காவலில் வைக்க கோரினார். நாங்கள் அதற்கு முன்பே முன்ஜாமீன் எடுத்திருந்தோம். பின்பு சுமார் 2 ,3 மாதங்கள் கழித்து போலிசார் வீட்டிடம் வந்து அழைத்தார்கள்.

நாங்கள் சென்றபோது இராணிப்பேட்டை மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் அழைத்தாள் வரமாட்டிர்களா 5 லட்சம் கொடுத்துவிட்டு கையெழுத்து போட்டு போங்கனு சொன்னாங்க, நான் எதற்கு என்று கையெழுத்து போட்டுனு போட சொல்லிறிங்கனு சொன்னேன். எனது கணவரையும் என்னையும் மிரட்டினார், எனது முடியை பிடித்து என்னை அடித்து கீழே தள்ளினார். நான் மயக்கம் ஆனேன். இன்னொரு போலிஸ் அம்மா தண்ணீ தொலித்து என்னை உட்கார வைத்தார்கள். அப்போது புவனேஸ்வரி அவர் அம்மா, அப்பா மற்றும் உறவினர்கள் அங்கே இருந்தார்கள். வெளியே போய் சொல்லக்கூடாது என்று போலிசார் எங்களை மிரட்டினார்கள். கட்டாயப்படுத்தி என்னிடமும், எனது கணவரையும் கையொப்பம் பெற்றார்கள் அன்றே 28.01.2020 அன்று நானும் எனது கணவரும் வாலாஜா அரசு மருத்துவமனை சென்றோம். அங்கு எங்களுக்கு சிகிச்சை அளித்தார்கள் அதற்கான புறநோயாளி சீட்டு அளிக்கப்பட்டது அதன் சான்றிட்ட நகல் **எ.சா.ஆ.4** ஆகும்.

பின்னர் வீட்டிற்கு வந்துவிட்டோம். மறுநாள் எனக்கு பல்வலி அதிகமாகிவிட்டது. என்னை முன்தினம் அடித்ததாள் தான் பல்வலி ஏற்பட்டது. ஆகவே, SMH மருத்துவமனைக்கு சென்றோம் அந்த மருத்துவமனையின் Assessment triage சான்றிட்ட நகல் **எ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பின்பு நான் மருத்துவமனையில் சிகிச்சை பார்த்தற்கான காயச்சான்றின் சான்றிட்ட நகல் **எ.சா.ஆ.6** ஆகும். 31.01.2020 அன்று போலீசார் என்னையும் என் கணவரையும் தாக்கியதற்காக மனித உரிமை ஆணையத்திற்கு ஒரு மனுவையும் மற்றும் மாவட்ட காவல்

கண்காணிப்பாளருக்கும் மனு அனுப்பினோம். மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிய மனுவின் சான்றிட்ட நகல் **எ.சா.ஆ.7** ஆகும்.

மனித உரிமை ஆணையத்திற்கு புகார் அளித்ததால் காவல் ஆய்வாளர் சுப்புலட்சுமி எனது மகனை அழைத்து சென்று காலையிலிருந்து மாலை வரை காவல் நிலைத்திலேயே வைத்திருந்து அவரை அடித்து துன்புறுத்தினார்கள். பின்பு எனது மகனுக்கு என்ன ஆனது என்று அறிந்துக்கொள்ள ஒருவரை அனுப்பினேன் அவர் என் மகனை கைது செய்ததாக வந்து தகவல் சொன்னார். மனித உரிமை ஆணையத்தில் நாங்கள் புகார் அளித்ததால் தான் என் மகனை கைது செய்தார்கள். மனித உரிமைய ஆணையத்திற்கு முன்பு வழக்கு நடந்து எங்களுக்கு சாதகமாக தீர்ப்பு வந்தது. ஆய்வாளர் என் மீதும், என் கணவர் மற்றும் மகன் மீது பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.

**அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA

District Munsif cum Judicial Magistrate, Ranipet
Digitally signed by SADASIVAM POORNIMA
Date: 2025.08.06 10:55:21 +0530

District Munsif cum Judicial Magistrate,
Ranipet.